பங்கிங்கலா : வடடு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 02 சனிக்கிழமை (18.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:352

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அடியோடு அழிக்க அரசு சதி!



## பாரதூரமான விளைவு ஏற்படும் என்கிறார் சிவாஜிலிங்கம்

கொழும்பு, நவ.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அடியோடு இல்லாதொழிக்கும்சதித்திட்டத்துடன் இந்த அரசு செயற்படுகிறது. அதன்படியே எமது எம்.பிக்களை ஒருவர் பின் ஒருவராகச்சுட்டுக்கொலை செய்கிறது. இந்த நிலை மேலும் தொடர்ந்தால் இந்த அரசு பாரிய எதிர்விளைவுகளை மிகவிரைவில் சந்திக்கவேண்டிவரும். இதை நான் அரசிற்கு முன்னெச்சரிக்கையாகக் கூறி வைக்க விரும்புகிறேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான எம்.கே. சிவாஜிலிங்கம், நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற 2007ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அடியோடு இல்லாதொழிக்கும் ஒரு கொலை வெறியாட்டத்தை இந்த அரசு அரங்கேற்றியுள்ளது.

அதன்படியே அரசு முன்னாள் எம்.பி. சந்திரநேருவைக் கொலை செய்தது. அதையடுத்து எமது தேசியப் பட்டியல் எம்.பி. ஜோஸப் பரராஜசிங்கத்தைக் கொலை செய்தது. அவரது வெற்றிடத்திற்கு நியமிக்கப்படவிருந்த விக்னேஸ்வரனைஅடுத்து கொலை செய்தது. இப்போது ரவிராஜைக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் கிளைமோர்

உடுப்பிட்டி, நவ.18

வடமராட்சி, கரவெட்டி, நவுண்டில் சந்தி - பொலிகண்டி வீதியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிளைமோர் குண்டு ஒன்று வெடித்துள்ளது.

வீதியால் ரோந்துசென்ற படையினரை இலக்குவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. சம்பவத்தை அடுத்து வீதியால் சென்றவர்களும் சம்பவ இடத்தில் நின்றவர்களும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் நடத்தும்போது வைகோ உட்பட ஆயிரம் தொண்டர்கள் நேற்றுக் கைது

சென்னை,நவ.18

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் போராட்டம் நடத்திய ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உட்பட 1000 தொண்டர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் ஈழத்தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்தும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி இந்தியா வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சென்னையில் ம.தி.மு.க. நேற்று போராட்டத்தையும் ஊர்வலத்தையும் நடத்தியது.

சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படுமென வைகோ ஏற்கனவே அறிவித்திருந்தபோதும், அதற்குப் பொலீஸார் அனுமதி வழங்கவில்லை. இந்தியத் தூதரகத்தை நோக்கி

(08 ஆம் பக்கம் பார்க்க)



# யுத்தநிறுத்த ஒப்பந்தம் இப்போது வெறும் காகிதம்; இரு தரப்புகளும் அதற்குப் புத்துயிர் அளிக்கவேண்டும்

## பிரிட்டிஷ் பிரதமரின் விசேட தூதுவராக இங்குவந்த வட அயர்லாந்தின் முன்னாள் அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, நவம்பர் 18

யுத்த நிறுத்த உடன்படிக்கை இப்போது இங்கு காகித வடிவில்தான் உள்ளது. அந்த உடன்படிக்கைக்கு இரண்டு தரப்புகளும் புத்துயிர் அளிக்கவேண்டும்.

அத்தோடு, இரு தரப்பினர் இடையேயும் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டிவளர்க்கவேண்டும். ஒரு தரப்பை அடுத்த தரப்பு மதித்து நடக்கும் பண்பும் வளர்க்கப்படுவது அவசியம்.

பேச்சுவார்த்தைக்குத் திரும்புவதற்கு இரு சாராரையும் இணங்கவைப்பதும் மிகவும் அவசியம் - பிரதான தேவையாகும்.

[08 ஆம் பக்கம் பார்க்க]



போல் மேர்பி

## பொன்சேகாவுக்கு நீடிப்பு கிடைக்குமா?

கொழும்பு, நவ.18

இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தனது பதவி நீடிப்புக்காகக் காத்திருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

சரத் பொன்சேகாவின் பதவிக் காலம் அவரது பிறந்த தினமான டிசம்பர் 18 ஆம் திகதி அவரது 56 ஆவது வயதுடன் நிறைவு பெறுகிறது.

எனினும், ஒரு வருடம் பதவி நீடிப்பு பெறுவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மூலம் சிபார்சுக் கடிதம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்தப் பதவி நீடிப்புக்காக மஹிந்தவின் அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை. இதற்கு இராணுவ மற்றும் இராஜதந்திர

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வாகரை மோதலில் இரு போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு வாகரை வட்டக்கல் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமாலை மோதல் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியை நோக்கி ஊடுருவ முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகின்றது. இந்த மோதலில் தமது தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளார்கள் எனவும் - படையினர் பலத்த சேதங்களுடன் பின்வாங்கினர் என்றும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

# நாட்டைப் பாதுகாக்கவே அதிக நிதி யுத்தத்தை மீண்டும் தொடங்க அல்ல!

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா விளக்கம்



கொழும்பு, நவ.18

நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுத்து - நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாப்பதற்காக இந்த வரவு - செலவுத் திட்டத்தில் அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதே தவிர மீண்டும் யுத்தத்தை தொடங்குவதற்காக அல்ல. யுத்தம் ஒன்றைத் தொடங்கும் திட்டம் அரசிடம் இல்லை. பேச்சுமூலம் பிரச்சினையைத் தீர்ப்பதே அரசின் நோக்கம். ஆகவே, நாட்டின் பாதுகாப்புக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைதவறாகப் பார்க்கவேண்டாம்.

-இவ்வாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு -

(08ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டு நிலைமையை கண்டறிய அமைச்சர் டக்ளஸ் நேற்று வந்தார்

யாழ்ப்பாணம், நவ. 18

குடாநாட்டில் தற்போதைய நிலைமையை நேரில் அறிவதற்கும், பொது மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமென சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகளை நேரில் கண்டு பொதுமக்களின் நாளாந்த பிரச்சினைகள் பலவற்றை தீர்த்து வைக்கும் நோக்கில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் [illegible]

(08 ஆம் பக்கம் பார்க்க)

# வாகரை சென்ற உணவு லொறிகள் நாவலடி முகாமில் தடுக்கப்பட்டன!

மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசமான வாகரைப் பகுதிக்கு நேற்று ஆறு லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்ட உணவுப் பொருள்கள் நாவலடிப் படை முகாமில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வின் ஏற்பாட்டில் இந்த அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அங்கு எடுத்துச் செல்லப்பட்டன.

[illegible] படை முகாமில் லொறிகளைப் படையினர் தடுத்து நிறுத்தினர். வாகரைப் பகுதியில் பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்த படையினர் (08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## செயலமர்வு பிற்போடப்பட்டது:

தீவகக் கல்வி வலய ஆசிரியர்களுக்கு இன்று நடத்தப்படவிருந்த செயலமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் தெரிவித்தார்.

தரம் 9 ஆசிரியர்களுக்கான சமூகக்கல்வி பாடச் செயலமர்வும் தரம் 10, 11 ஆசிரியர்களுக்கான தொழில்நுட்பப்பாடச் செலயமர்வும் நாளை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 7 ஆசிரியர்களுக்கான கணிதபாடச் செயலமர்வும் தரம் 10, 11 ஆசியர்களுக்கான அழகியல் பாடச் செயலமர்வும் நாளை நடைபெறமாட்டா எனவும் -செயலமர்வு நடைபெறும் திகதி குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும்- வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (1-202)

## ஆசிரியருக்குச் செயலமர்வு

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். கல்வி வலய பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் 'வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு' என்றும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (1-202)

## விழி கரையும் அடிகள்

### அமரர் நடராஜா ரவிராஜ்



உன்மொழி திறந்த போது
பலர்வழி பிறந்தது
உன்கைகள் நீண்டபோது
பலகைகள் வளர்ந்தது
தேசம் இருண்டபோது
நின் திறமை தெரிந்தது
உன் கொடி சாய்ந்தபோது
தமிழ்க்குலமே வாடுது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினரின் துயரிலும் பங்குகொள்கிறோம்.

வேம்பிராய்,
மீசாலை வடக்கு,கொடிகாமம். பாரதி சனசமூக நிலையத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஜெயச்சந்திரன் யமுனா

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும்கொண்ட ஜெயச்சந்திரன் யமுனா நேற்று (17.11.2006)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் செல்லையா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமக ளும் ஜெயச்சந்திரனின் மனைவியும், துஸ்யந்தன், வசந்தநாயகி, கணபதிப்பிள்ளை, சுசீலா, ஸ்கந்ததாஸ் (ராசு), அமரர் கிரிசா ஆகியோரின் சகோதரியும் சிறிஸ்கந்தராஜா, பவானி, வைகுந்தவாசன், அமரர் சாந்தினி, ஜெயந்தினி, அமரர் கிரிதரன் (மயூரன்), சுதர்சினி, றஜனி, சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2006) சனிக்கிழமை மு.பகல் 10 மணிக்கு உடுவில் தெற்கு பாலாவோடையில் நடைபெற்றுப் தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
தகவல்:
செ. ஜெயச்சந்திரன் (கணவர்).

### ஆறுமுகம் பாக்கியலட்சுமி (சடையாளி காரைநர்)

காரைநகர், சடையாளியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் பாக்கியலட்சுமி 13.11.2006 திங்கட்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வே.ஆறுமுகத்தின் (முன்னாள் வர்த்தகர், சந்நிதியான் ஸ்ரோர்ஸ் - பழைய கண்டி காரைநகர், மடுல்கலை) மனைவியும் சடையாளி காலஞ்சென்ற பொன்னம்பலம் - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் செந்தில்நாதனின் (சுவிஸ்), அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன், நாகேஸ்வரன் ஆகியோரின் சிறியதாயும் வேதநாயகி, விஜயலட்சுமி, கலாசோதி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான சிவகாமிப்பிள்ளை, பாறுவதிப்பிள்ளை, சுந்தரம்மா, சடையாளி தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் அரிகரன், அரிகரசுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.11.2006 செவ்வாய்க்கிழமை காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சடையாளி,
காரைநகர்.
தகவல்:
ஆ.செந்தில்நாதன்(மகன்-சுவிஸ்),
நா.அரிகரன்(பேரன்).

### திருமதி நாகேந்திரா மனோன்மணி



நவாலி வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மனோன்மணி நாகேந்திரா (பவளமக்கா) (16.11.2006) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற எ.நாகேந்திரா (சட்டத்தரணி) அவர்களின் மனைவியும் நவரட்ணம் - நகுலாம்பிகை தம்பதியரின் மகளும் திலகவதி,சந்திரசேகரன் (Sterling producets Ltd) சிவபூரணம், Dr.சரவணபவானந்தன், தனலட்சுமி, சகாதேவன் ஆகியோரின் சகோதரியும் வைகுந்தனின் (குட்டி) தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (18.11.2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 1 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நவாலி வடக்கு, மானிப்பாய். (55321)
தகவல்:
நா. வைகுந்தம்.

## நெல்லியடியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

உடுப்பிட்டி,நவ.18

கரவெட்டி, நெல்லியடி, சாமியன் அரசடியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை 8.15 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

துன்னாலை, கலிகைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொடிகாமத்தை நிரந்தர முகவரியாகவும் கொண்ட எஸ். மனோகரன் (வயது- 29) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே கொல்லப்பட்டவராவார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கும் படி நீதிபதி உத்தரவிட்டார்.

இனந்தெரியாத ஆயுததாரிகள் குறிப்பிட்ட நபரை வீதியில் கலைத்துக் கலைத்துச் சுட்டதாக விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

(1-202-155-68)

### தவறிவிட்டது

மயிலவளவு, இமையாளன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த தங்கவேலு சுதாகரன் என்பவரது தே.அ.அட்டை (இல. 832124133V) நெல்லியடியில் இருந்து வீடு திரும்பும் வழியில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கிராமசேவையாளர் கந்தசாமியிடம் (J/368) அல்லது மேற்படி முவகரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சந்திரசேகரம் குலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

எமது பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றிய செல்வி கு.கிரிஷாந்தி அவர்களின் அன்புத் தந்தை

**சந்திரசேகரம் குலசிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கரவெட்டி.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி அன்னலட்சுமி நாகநாதர்

(முன்னாள் ஆசிரியர், யா/ அருணோதயக் கல்லூரி)

நீண்டகாலம் எமது கல்லூரியில் சேவையாற்றி 16.11.2006 சிவபதம் அடைந்த எமது கல்லூரி முன்னாள் ஆசிரியர் திருமதி அன்னலட்சுமி நாக நாதர் அவர்களின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த் திப்பதோடு அன்னா ரைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலி யையும் செலுத்துகிறோம்.

ஆசிரியர் கழகம்
யா/ அருணோதயக் கல்லூரி

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் கணேஸ் ஐயா

இணுவில் மேற்கைச் சேர்ந்த இராமலிங்கம் கணேஸ் ஐயா (16.11.2006) வியாழக்கிழமை சிவஐக்கியமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.11.2006) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் (55319)

இணுவில் மேற்கு.
தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லப்பா தம்பிப்பிள்ளை

(முன்னாள் சாரதி,சாவகச்சேரி ப.நோ.கூ.ச. )



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தம்பிப்பிள்ளை 17.11.2006 அன்று காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2006)சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.
தகவல்:
[illegible]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சத்தியபாலதேவி நவரத்தினம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, ஐயனார்கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சத்தியபாலதேவி நவரத்தினம் 16.11.2006 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் K.V. நவரத்தினம்(முன்னாள் நீதிபதி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வரத்தினம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும், திருமதி சரோஜாதேவி கணேசதாசன்(U.S.A.), திருமதி இரத்தினாதேவி சிதம்பரநாதன்(நியூசிலாந்து), இராகவன்(கொமர்ஷல் வங்கி) ஆகியோரின் அருமைச்சகோதரியும்இரவீந்திரநாதன்(யூனியன்வங்கி), ஜெயந்தி, ஜெயலஷ்மி, ஜெயதேவி(ஆசிரியை, தமிழ் மகாவித்தியாலயம் - நுகேகொட),மாலினி(ஆசிரியை, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தாயும் மாலதி, ஸ்ரீபவன்(மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்), வெற்றிவேல் (யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் மாமியும், தயாபரன் (மிலேனியம் தகவல் தொழில் நுட்ப நிலையம், மாலபே), கஜானன்(கொழும்பு இந்துக் கல்லூரி), நாராயணி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள், இல.10, ஸ்ரேசன் வீதி, வெள்ளவத்தை இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணியளவில் நடைபெற்று, மு.ப 11 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும் என்பதை அறியத்தரு கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொ.பே.: 2588296 (சி/51368)
தகவல்:
ந.இரவீந்திரநாதன்(மகன்).

### நாகலிங்கம் சீனிவாசகம்

வண்ணார்பண்ணை , கலட்டிஅம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம் கோண்டாவில், இணுவில் தெற்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சீனிவாசகம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் சற்குணரட்ணத்தின்(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவர்) தந்தையும் விஜயலட்சுமியின்(ஆசிரியை மானிப்பாய் மகளிர் கல்லூரி) மாமனும் தட்சாயினி(ஆசிரியை, வ/ கோவிற்புளியங்குளம்), குணசீலன்(ஆசிரியர் வ/கணேஸ்வர மகாவித்தியா லயம்), கோகுலன் (பொறியியற்பீடம், இறுதிவருட மொறட்டுவப் பல்கலைக்கழகம்), அஜந்தாஜினி(விவசாயக் கல்லூரி, குண்டசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்வினியின் பூட்டனுமாவார்.

அன்னாரது தகனக்கிரியைகள் 15.11.2006 புதன்கிழமை தாவடி இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகதுவீபம்,
இணுவில் தெற்கு. (55317)
தகவல்:
சற்குணரட்ணம்(மகன்).

### பொன்னையா சரஸ்வதி

கல்வயலைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவைப் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சரஸ்வதி அவர்கள் 15.11.2006 புதன்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பென்னையாவின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும் இராசரெத்தினம் (கனடா-ஓய்வுபெற்ற அதிபர்),ஜெகசோதி (கொழும்பு) ஆகி யோரின் அன்புச் சகோதரியும் ,Dr. ஜெயந்தி (நியூ சிலாந்து), ஜெயமோகன்(ஆஸ்திரேலியா),ஜெயதேவன் (ஆஸ்திரேலியா), ஜெயானந்தன் (அவுஸ்ரேலியா),ஆகியோரின் அன்புத் தாயும் Dr. கிருஸ்ணமோகன் (நியூசிலாந்து) ,மிருணாளினி (ஆஸ்திரே லியா), சிவசக்தி (ஆஸ்திரேலியா),கிருபா (ஆஸ்திரேலியா)ஆகியோரின் அன்பு மாமியும் சஞ்சே, திலக்ஷன், மிதுனன், சாரா,லக்ஷா, அனோஜன்,ஆகாஷ், கிஷானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2006) சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
திருமதி.இராகினி
ஜெயக்குமார்,கல்வயல்,சாவகச்சேரி.
ஜெயமோகன், ஆஸ்திரேலியா,
0061-298630645. (55324)
மருமக்கள், இ.ரவீந்திரன்
( அதிபர்-யா/கல்வயல்
ஸ்ரீசண் முகானந்தா
வித்தியாலயம்)

### சந்திரசேகரம்பிள்ளை குலசிங்கம்

(முன்னாள் ஆங்கில ஆசிரியர், பரு/ வேலாயுதம் ம.ம.வி., நெல்லியடி ம.ம.வி.)



சந்திரசேகரம்பிள்ளை குலசிங்கம் நேற்று (17.11.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பரு/ கரணவாய் காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட மகனும், பரு/ புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இலக்கணநாயகி தம்பதியரின் சிரேஷ்ட மருமகனும் பரு/புலோலியைச் சேர்ந்த ஜெயபூபதியின் (இளைப்பாறிய ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி கல்விக் கோட்டம்) அன்புக் கணவரும் சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து, தணிகாசலம் - யோகாதேவி , சுந்தரலிங்கம் - திலகவதி (உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்), தயானந்தம் - விமலரெத்தினம் (கனடா), காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை - இராஜசிங்கம் (பொலிஸ் சார்ஜண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வி கிருஷாந்தி (முன்னாள் ஆசிரியை, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், தற்போதைய ஆசிரியர் நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலயம்), திருமதி சுசாந்தி - சத்தியமூர்த்தி (லண்டன்), வசீகரன் (முன்னாள் முகாமையாளர், எக்ஸ்போ ஏவியேசன் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மலிங்கம் - சத்தியமூர்த்தி (லண்டன்), திருமதி வ.சுபத்திரா ஆகியோரின் மாமனும், செல்வன் வ. புருஷோத்தின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யா/ கச்சேரி நல்லூர் வீதி, 214ஆம் இலக்க இல்லத்தில் (யா/ சென் பெனடிக் வித்தி. அருகில்) நடைபெற்றுப் பூதவுடல் நாளை (19.11.2006) முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55318)
தகவல்:
மனைவி, பிள்ளைகள் சார்பில்
கு.வசீகரன் (மகன்),
தொ.பே. இல. 021 222 2438.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விமானிகளுக்கு பயிற்சி அளிப்பதை நிறுத்துக

## இந்திய அரசிடம் ராமதாஸ் கோரிக்கை



சென்னை,நவ.18

இலங்கை விமானப் படையின் விமானிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இராணுவம் தொடர்பாக இலங்கைக்கு எந்த உதவியும் செய்யமாட்டோம் என்ற உத்தரவாதத்தையும் இந்திய அரசு வழங்க வேண்டும்.

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழகத்தில் கோவையிலும் பஞ்சாப்பில் சண்டிகாரிலும் உள்ள விமானப்படை பயிற்சி நிலையங்களில் பயிற்சி எடுத்துவருவதாகக் கூறப்படும் இலங்கை விமானப் படை அதிகாரிகளை உடனடியாக வெளியேற்றவேண்டும்.

இலங்கையில் அதிகரித்து வரும் ஈழத் தமிழர்களின் உயிரிழப்பு பற்றி ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியிருக்கிறோம் என்றும் -

இது தொடர்பாக இலங்கை அரசுக்கு எங்களுடைய உணர்வுகளை மீண்டும் எடுத்துரைப்போம் என்றும் -

பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருக்கிறார். அவருடைய கரிசனை ஆறுதலை அளிக்கிறது. ஆனால், இலங்கைத் தமிழர்களின் சொல்லொண்ணாத் துயரத்தை ஆற்றும் மருந்தாக அது அமையாது.

அங்கு தாக்குதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். உணவுப்பொருள்களும் மருந்துப்பொருள்களும் ஈழத்தமிழர்களுக்குக் கிடைப்பதற்கு வசதியாக ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்படவேண்டும். அதற்கு இந்தியா உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே நாங்கள் வலியுறுத்தியுள்ளபடி இந்தியாவுக்கு வருவதற்கு முன்னதாக ஏ-9 நெடுஞ்சாலையைத் திறந்துவிட்டு, தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷவைக் கட்டாயப்படுத்தவேண்டும்.

இந்தியாவுடன் பேசிக்கொண்ட பாகிஸ்தானும் அருணாசலப் பிரதேசத்தை அபகரிக்க முயலும் சீனாவுடனும் இராணுவத் தளபாட உதவிகளைப் பெற்று வரும் இலங்கையை இந்தியாவின் எதிரியாகத்தான் கருதவேண்டும்.

இந்தியாவுக்கு ராஜபக்ஷ வரும்போது தன்னுடைய நிலைப்பாட்டை இந்தியா திட்டவட்டமாகத் தெரிவிக்கவேண்டும். இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பைப் பொறுத்தவரை எவ்வித சமரசப் போக்கையும் இந்தியா மேற்கொள்ளாது என்பதை அவருக்குத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தவேண்டும். இதைத் தவிர்த்து ஆறுதல் வார்த்தைகளால் மட்டும் இலங்கை அரசின் மனநிலையை மாற்றிவிடமுடியாது.

இப்படி ஒரு தீவிரமான நிலைப்பாட்டை இந்திய அரசு மேற்கொள்ளவேண்டுமானால் அது தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் கையில் - குறிப்பாக - ஆட்சிப் பொறுப்பில் உள்ள முதலமைச்சர் கருணாநிதியின் கையில்தான் இருக்கிறது. - என்றுள்ளது. (203)

# குலுக்கல் முறையில் நுளம்புத்திரி விற்பனை!

தென்மராட்சி,நவ.18

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கடைகளில் குலுக்கல் முறையில் நுளம்புத்திரி வழங்கப்பட்டு வருகிறது.

கிளையில் உள்ள பங்கீட்டு அட்டைகளைப் பட்டியலிட்டு பட்டியல் பிரகாரம் இலக்கத் துண்டுகள் எழுதப்பட்டு கிராம அலுவலர், கிளைக் குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் முன்னிலையில் குலுக்கல் இடம்பெற்று அதிர்ஷ்டசாலிகளுக்கு நுளம்புத்திரி வழங்கப்பட்டு வருகிறது.

# இந்திய அரசின் மனிதாபிமான உதவிகள் செஞ்சிலுவை ஊடாகவே செல்லவேண்டும்

## பிரதமரிடம் வைகோ மீண்டும் வலியுறுத்து



சென்னை,நவ.18

இலங்கையில் இன்னல்படும் தமிழர்களுக்காக இந்திய அனுப்பத் திட்டமிட்டுள்ள உணவுப் பொருள்களைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலமே வழங்க வேண்டும் என ம.தி.மு.க.வின் பொதுச் செயலர் வைகோ பிரதமரிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே வைகோ பிரதமரிடம் செஞ்சிலுவைச் சங்கம் மூலமே உணவுப் பொருள்களை இலங்கைக்கு அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது-

பட்டினியால் வாடும் தமிழர்களுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படும் என்று பிரதமர் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. உணவுப்பொருள்கள் அனுப்பவேண்டும் என ம.தி.மு.க. சார்பில் ஏற்கனவே பிரதமரிடம் மனுக்கொடுத்திருந்தோம்.

அனுப்பப்படும் உணவுப் பொருள்களை இலங்கை அரசு நிர்வாகம் மூலம் விநியோகிக்காமல் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் விநியோகிக்கவேண்டும். அரசு நிர்வாகம் மூலம் விநியோகத்தால் அதில் பெரும் பகுதியை யாழ்ப்பாணத்தில் உள்ள படையினருக்கு வழங்கிவிடுவார்கள் - என்றார். (202)

# சாதாரண தர மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

கரவெட்டி, நவ.18

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குப் பருத்தித்துறை கிறிஸ்தவ ஒன்றியம் முன்னோடிப் பயிற்சிப் பரீட்சையை நடத்தவுள்ளது.

இம்மாணவர்களுக்கான விசேட பயிற்சிகளை ஒன்றியம் தற்போது வழங்கி வருகின்றது.

இப்பயிற்சியின் நிறைவில் - நாளை ஞாயிற்றுக்கிழமை - வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை ஆகிய இடங்களில் முன்னோடிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வடஇந்து மகளிர் கல்லூரி, வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட 20 மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். (1-202-70)

# சாவகச்சேரிச் சந்தையில் மரக்கறி, மீன் விலைகள் நாளுக்கு நாள் உயர்வு

தென்மராட்சி,நவ.18

சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வகைகள், தேங்காய், மீன் வகைகள் ஆகியவற்றின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

மரக்கறி வகைகளில் கத்தரிக்காய கிலோ 350 ரூபாவிற்கும் பாவற்காய் 160 ரூபாவிற்கும், பயற்றங்காய் 100ரூபாவிற்கும் கரட், கோவா, பீற்றூட் போன்றவை 60 ரூபாவிற்கும் மேலாக விற்பனை செய்யப்படுகின்றன. தேங்காய் 80 ரூபா வரை விற்கப்படுகிறது.

இதேவேளை மீன் வகைகள் கிலோ 600 ரூபா தொடக்கம் 800 ரூபா வரையும் விற்கப்படுகின்றன. இறால் கிலோ ஆயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (202)

# நாவற்குழி மாணவர்களுக்கு கொப்பிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.18

நாவற்குழி மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்கு செயற்திறன் அரங்க இயக்கம் அப்பியாசப் புத்தகங்களை வழங்கியுள்ளது.

பாடசாலையில் கல்வி கற்கும் 550 மாணவர்களுக்கு இப்பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் உள்ள மக்கள் மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களாக இருப்பதால் அவர்களின் பிள்ளைகள் பயிற்சிப் புத்தகங்கள் இன்மையால் பாடசாலைக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்தப் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (1-202-68)

# உயர்தொழில்நுட்ப நிறுவன கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பல்வேறு கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.எம், எச்.என்.டி.ஈ, எச்.என்.டி.இ, எச்.என்.டி.பி.எஸ், எச்.என்.டி.ஐ.ரி. ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2005ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், இக்கற்றை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்படிவங்களை யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும்-

மேலதிக விவரங்களை கடந்த 27ஆம் திகதிய வீத்தமானியில் பார்வையிடலாம் என்றும் -

நிறுவனத்தின் பணிப்பாளர் வே.கருணாநிதி தெரிவித்துள்ளார். (1-202-79)

# உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 5 மக்கள் கடைகள் திறப்பு

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் நானாவிதப் பொருள்கள் 5 மக்கள் கடைகளூடாக வழங்கப்படுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் மேற்கொண்டுள்ளது.

ஜே/182, ஜே/183, ஜே/184, ஜே/185, ஜே/186, ஜே/187 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு உடுவிலிலும்-

ஜே/188, ஜே/189, ஜே/190, ஜே/191, ஜே/192, ஜே/193, ஜே/194 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு இணுவிலிலும்-

ஜே/195, ஜே/196, ஜே/197, ஜே/198, ஜே/199, ஜே/200 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்குச் சுன்னாகத்திலும்-

ஜே/201, ஜே/202, ஜே/203, ஜே/204, ஜே/205, ஜே/206 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு ஏழாலையிலும்-

ஜே/207, ஜே/208, ஜே/209, ஜே/210, ஜே/211 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு புன்னாலைக்கட்டுவனிலுமாக ஐந்து மக்கள் கடைகள்திறக்கப்பட்டுள்ளன.

செத்தல் மிளகாய், மல்லி, சர்க்கரை, கடலை, பயறு, தேங்காய்எண்ணெய், வெள்ளைப்பூடு, வெந்தயம், பேரீச்சம்பழம், பிஸ்கட், நூடில்ஸ், தேங்காய்ப் பால்மா, மீன் ரின் ஆகிய பொருள்களே விநியோகிக்கப்படுகின்றன என்று வலி.தெற்குப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (1-202)

# நோயாளி ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக விமானமூலம் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் அவசர சிகிச்சைக்காக விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தலைமையகம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தலையின் உட்பகுதியில் நரம்பொன்று வெடித்ததால் இரத்தம் கசிந்து மிகவும் ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ரங்கநாதன் பிரபாசங்கர் (வயது 30) என்னும் நோயாளிக்கு கடந்த புதன்கிழமை விமான பயண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஈ.ஞானசோதி இவ்விடயம் குறித்து யாழ்.பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இவ்விடயம் பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு மனிதநேய அடிப்படையில் பயண ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது. - என்றுள்ளது. (202)



இலங்கை வங்கியின் யாழ். மாவட்டக் கிளைகளில் இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த மாதம் 29ஆம் திகதி வங்கியின் மேற்றரக் கிளையில் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது. கௌரவிக்கப்பட்ட ஊழியர்களான (நிற்பவர்கள் இடமிருந்து வலம்) திருமதி சி.ஜி.பி.பாலகுமாரநாதன், கே.நாகமணி, வி.செல்வராஜன், பி.விவேகானந்தன், எஸ்.கிருஷ்ணானந்தன், எஸ்.விமலதர்மஜயா, ஆர்.சிவபாக்கியநாதன், என்.இந்திரகுமார், ரி.குகனேசன், கே.கனகசபை ஆகியோரும் -

மாவட்ட முகாமையாளர் ஏ.ரி.ஏ.தேவராஜா, வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஏ.அருமைநாயகம், செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரத்தினம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (202)

# நல்லூர் பிரதேச சபை மேற்கொண்ட புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தம்

## மூலப்பொருள்களின் தட்டுப்பாடே காரணம்

குடாநாட்டில் கட்டடப்பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் நல்லூர் பிரதேசத்தில் பல புனரமைப்பு வேலைத் திட்டங்கள் முடங்கிப்போயுள்ளன என்று நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில் தெரிவித்ததாவது-

யாழ்.குடாநாட்டுக்கான ஏ-9 வீதி மூடப்பட்டதால் சீமெந்து, கம்பி, தார் போன்ற பல மூலப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பல புனரமைப்பு வேலைகள் முடங்கியுள்ளன.

குறிப்பாக கொக்குவில் சந்தை புனரமைப்பு, திருநெல்வேலி பாற்பண்ணை மகாத்மா சனசமூக நிலைய புனரமைப்பு, இணுவில் காரைக்கால் பகுதியிலுள்ள பொதுக் கிணறுகள் தோண்டுதல் உட்பட பல முக்கிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ளமுடியாமலுள்ளன.

இதனால் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். - என்றார். (202-79)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரவிழிகளுடன் ஈராண்டுகள்...

அன்னை மடியினில் 15 . 10 . 1944



ஆண்டவன் அணைப்பில் 18 . 11 . 2002

### முருகேசு குணநாயகம் M.G.M

(பிரபல ஆயுர்வேத வைத்தியர் - காரைநகர்)

*ஆண்டுகள் நான்கு ஆனதப்பா*
*ஆறவில்லை நம் துயரம்*
*நிலைத்திட்ட இவ்வுலகில்*
*நிலையற்ற எம் வாழ்வில்*
*நீக்கமற நிற்கிறீர்கள்*
*என்றும் எம்முடனே*
*நிலையாக வாழ்ந்திடுங்கள்.*

கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (55298)

**கு.றோசமலர் (மனைவி), பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 * 08 * 1937



மறைவு 19 * 10 * 2006

அமரர்

### செபஸ்ரியாம்பிள்ளை இராசாத்தி

*(சின்னப்பிள்ளை)*

உதிர்ந்து விட்ட பூவாக
மண்ணில் மறைந்து விட்டபோதிலும்
நெஞ்சில் எழுதி வைத்த உன்
நினைவுகள் உயிரோடு வாழும்.

*மீளாத்துயரில்:*
*கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.*

*53, இராசேந்திரா வீதி, யாழ்ப்பாணம்,* (55303)

## ஓராண்டு நினைவலைகள்



### வினாசித்தம்பி உதயசந்திரன்

*உதித்தல் 02.04.1940*

*மறைதல் 29.11.2005*

திதி: திரியோதசி 18.11.2006

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்தீர் அப்பா!
அன்புக்குரிய கணவனாக மனைவியுடனும்
செல்லத்தந்தையாக பிள்ளைகளுடனும்
பண்பாக உறவினர்களுடனும் இருந்தீர் அப்பா!
பாசமுடன் எமை வளர்த்து நேசத்துடன் இருந்தீர் அப்பா!
ஆசை கொண்டு உள்ளம் மகிழும் நேரம்
சிவன் தேசம்சென்றீர் அப்பா!
**உங்களின் ஆத்மா சாந்தியடைய எம் உயிர் உள்ளவரை**
**இறைவனைப் பிரார்த்திப்போம்.**

*74, பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை.*

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலேஸ்வரி இராகவன்

(ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி)



அம்பலவாணர் பாதை, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கை வதிவிடமாகக் கொண்ட திருமதி நகுலேஸ்வரி இராகவன் 16.11.2006 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (மாஸ்ரர்)-இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும் நடராஜா-கனகாம்பிகை தம்பதியரின் பெறாமகளும் திருநெல்வேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் இராகவனின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் - நீலாயதாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் நாகேஸ்வரி (கொழும்பு), மோகனதாஸன் (ஜேர்மனி), புவனராஜன் (சுவிஸ்), கணேசராஜன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விசுவலிங்கம் அவர்களின் மருமகளும் கணேசமூர்த்தி (கொழும்பு), நந்தினி (ஜேர்மனி), ரதி (சுவிஸ்), சிறீகாந்தா (சிலாபம்), செந்திற்செல்வம் (பபா - கொழும்பு), சூரியகுமாரன் (லண்டன்), பாலச்சந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற அனுசூயா, உதயணன் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் நிருஷன், சகன்யா, சிந்துஜா, சஞ்சீவ், சைலஜன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**சு.இராகவன்** *(கணவர்)*

அம்பலவாணர் பாதை, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. (55313)

## கண்ணீர் அஞ்சலி



### சின்னையா தேவராஜா

(இளைப்பாறிய உடற்கல்வி ஆசிரியர்- கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உடற்கல்வி ஆசிரியர்கள்,
*யாழ்.கல்வி வலயம். யாழ்ப்பாணம்.*

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை விசுவநாதன்



வேலணை மேற்கு, சிற்பனையைச் சேர்ந்தவரும்கந்தர்மடத்தில்வசித்தவருமான கொழும்பு பிரபல வர்த்தகர் கணபதிப்பிள்ளை விசுவநாதன் அவர்கள் 16.11.2006 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் அகால மரணமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் யோகநாதன் (லண்டன்), லலிதா, செல்வநாதன் (லண்டன்), வாசுகி, ரகுநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமாரி (லண்டன்), பாலசூரியன் (செல்வம் - தியாகராசா ஸ்ரோர்ஸ் - காலி), தயா (லண்டன்), கங்கைவேணியன் (வேணி களஞ்சியம் - யாழ்ப்பாணம்), நிஷாந்தி (லண்டன்) ஆகியோரின் மாமனும் குகனேஸ்வரி (கொழும்பு), இராசலட்சுமி (கொழும்பு), மோகனதாஸ் (சிவசக்தி ஸ்ரோர்ஸ், கொழும்பு), சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கொழும்பு வர்த்தகர்கள் சிவசரணம் மற்றும் கனகரெத்தினம் (கொழும்பு), ரதி (கொழும்பு), சரவணபவானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரியந், சுகந், பானுரேகா, பிரியா, சுதர்சன், திவ்வியா, சுகந்தன், மயூரன், மதுரகன், பிரசாந்தி, சுகந்தி, கோகிலா, ராகவி, ஆருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

தகவல்:
**திலகவதி (மனைவி),**
**பாலசூரியன் (செல்வம்-இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்),**
**லயன் கங்கைவேணியன் (வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்), மருமக்கள்**
*72,பழம் வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

**மு.குறிப்பு:**
பூதவுடல் இன்று காலை [18.11.2006] 6.30 மணிக்கு கொழும்புக்கு எடுத்துச் செல் லப்பட்டு இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

### கணபதிப்பிள்ளை பொன்னையா



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மன்னார், திருக்கேதீச்சரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பொன்னையா (ஆசாரியார்) 16.11.2006 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மன்னார், உப்புக்குளத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கா.அரியரத்தினம் (மகன்)**
*230, சட்டநாதர் வீதி, நல்லூர்.*

### சின்னத்துரை நேசமலர்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மட்டக்குளி, கொழும்பு - 15 வசிப் பிடமாகக் கொண்ட சின்னத்துரை நேசமலர் 15.11.2006 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசு-குல மணி தம்பதியரின் அன்பு மகளும் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், பிரபா, பிரியா, சுதன், கோபி, சங்கர் ஆகியோரின் பாசமிகு தாயும் துரை, காந்தன், மோகன், குகன், குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பட்டு, மனோ, பட்டு-இராசாத்தி, ஜெயா ஆகியோரின் மைத்துனியும் றமேஸ், கிரி, தீபா, சுபா ஆகியோரின் பாசமிகு அத்தையும் கவிதா, சுஜி, உதயலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் மியுசியா, அவினாஷ், அவிந்தியா, [illegible] ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

தகவல்:
**துரை (தம்பி).**

(55315)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுசிலாதேவி மகேந்திரன் (சுசி)



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுசிலாதேவி மகேந்திரன் 16.11.2006 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரமசிங்கம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும் மகேந்திரனின் (லண்டன்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயில்வாகனம் - காந்திமதி தம்பதியரின் அன்பு மருமகளும் லசிகா, தயந்தன் (அமெரிக்கா), தனுசிகா ஆகியோரின் பாசமிகு தாயும் பரமேஸ்வரி, கமலாம்பிகை, மாணிக்கவாசகர் ஆகியோரின் அருமைத் தங்கையும் பரமசிவம், அம்பிகா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (19.11.2006) கொழும்பில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*தகவல்:*
**மாணிக்கவாசகர்** *(அண்ணா) (சைக்கிள் கடை உரிமையாளர்)*

116/4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். (55302)

### நாகமுத்து பரமசாமி

(ஓய்வுபெற்ற அதிபர்)



அரியாலை மத்தி, திருமகள் வீதியைச் சேர்ந்த நாகமுத்து பரமசாமி (ஓய்வுபெற்ற அதிபர்) 16.11.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் நாகநந்தினி (ஆசிரியை - திருகோணமலை), ஜீவநந்தினி (ஆசிரியை - திருகோணமலை), ஹேமநந்தினி (ஆசிரியை - சென்ற்.ஜோசப் வித்தியாலயம்), சிவவேலழகன் (சோபி அரைக்கும் ஆலை உரிமையாளர்), சிவஸ்காந்தன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசன் (இ.போ.ச. திருகோணமலை), ஜெயராசா (பாஸ்டர் - திருகோணமலை), தூயகுமாரன் (யாழ். பல்கலைக்கழகம்), சிசில் நேருஜினி, பத்மகலா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (18.11.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் நல்லூர் பரி. யாக்கோபு ஆலய சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

அரியாலை மத்தி (55306)

### நீக்கிலாஸ் திரேசம்மா



சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் 63, A.V.றோட், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாஸ் திரேசம்மா 16.11.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பர்னாந்து - தொம்மாசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நீக்கிலாஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கஸ்பாறு, நீக்கிலாஸ், கிறிஸ்ரினம்மா, அன்னம்மா மற்றும் ஞானம்மா (பிரான்ஸ்), மரியதாஸ் (கனடா) ஆகியோரின் சகோதரியும் மேரி செல்வராணி, பயஸ் (நீர்கொழும்பு), யேசுரட்ணம் (I.C.R.C. கிளிநொச்சி), இராஜரட்ணம், செல்வமணி, செல்வரட்ணம் (நீர்கொழும்பு), சர்வேஸ்வரி, லீனஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் நீக்கிலாஸ், சிறாணி, நிர்மிலா, அணஸ்ரா, மதியாபரணம் (C.T.B), அருள், சில்வெஸ்ரர், செல்வி ஆகியோரின் மாமியும் வைலற், வஜிதா, நிமால் (லண்டன்), விஜிதா, கொண்சன், கொண்சலா, இநோக்கா (சுவீடன்), நிரோஜன் (சுவீடன்), சிம்ஷன், சுஜீபா, சசிக்கா, ஜெனிசலா, தர்ஷிகா, தனோஷன், டிலக்ஷிதா, டிலக்ஷன், டினேஷன், லிபுஷன், அபிஷன் ஆகியோரின் பேர்த்தியும் நிவேர்த்திகா, ஜெகநிபோஷன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (18.11.2006) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் உடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**நீ.பி.இராஜரட்ணம்**
(மகன் - நியூ ஜெயசலா ஸ்ரோர்ஸ், கொழும்புத்துறை)

63,A.V. றோட், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (55307)

### வேலுப்பிள்ளை தங்கராஜா

(ஓய்வுபெற்ற M.L.T )

அல்வாயைப் பிறப்பிடமாகவும், பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங்கராஜா நேற்று (17.11.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தனேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும் சிவானந்தராஜா (அமெரிக்கா), ஆனந்தராணி (கனடா), யோகராணி, சிவலோகராஜா (அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் தந்தையும் வசந்தி, கலைமணி, தவக்குமார் ஆகியோரின் மாமனும் நிரோஜாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2006) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள்.**

*"ஈஸ்வரி வாசா" பத்தமேனி, அச்சுவேலி.* (55299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப் பரீட்சை நடத்த ஏற்பாடு

## யாழ். மாநகர ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ.18

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப் பரீட்சையை நடத்தவுள்ளது. இப்பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஐந்து பிரிவுகளாக நடத்தப்படவிருக்கும் இப்பரீட்சை அடுத்த மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 25 பரீட்சை நிலையங்களில் இடம்பெறும்.

விண்ணப்பப் படிவங்கள் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்புமாறு குழுவின் தலைவரும் மாநகர சபை ஆணையாளருமான மு.செ.சரவணபவ கேட்டுள்ளார். (1-202)

# யாழ். வலயத்தில் திங்கள் முதல் சாதாரண தர மாணவருக்கு பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.18

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான யாழ். வலய மட்ட முன்னோடிப் பரீட்சைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஏழு தினங்கள் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கான நேர அட்டவணை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அட்டவணையின்படி பரீட்சைகள் நடைபெறவுள்ள தினங்களின் விவரம் வருமாறு:

நாளை மறுதினம் திங்கட்கிழமை - தமிழ் மொழியும், மறுநாள் செவ்வாய்க்கிழமை - சமூகக்கல்வியும், 22ஆம் திகதி புதன்கிழமை - அழகியல் மற்றும் சித்திரமும், 23ஆம் திகதி வியாழக்கிழமை ஆங்கிலம், சமயம் ஆகிய பாடங்களும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 24ஆத் திகதி வெள்ளிக்கிழமை வர்த்தகம், தொழில்நுட்பப் பாடங்கள் ஆகியனவும் 25ஆம் திகதி சனிக்கிழமை விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கணிதமும் நடைபெறவுள்ளன. (1-203-111)

# தென்மராட்சியில் செவ்வாய் ஆரம்பம்

தென்மராட்சி,நவ.18

தென்மராட்சி கல்வி வலயப் படசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வ்லயக் கல்வி அலுவலகத்தினால் முன்னோடிப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

பரீட்சைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (202)

# கரித்தாஸ் ஏற்பாட்டில் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,நவ.18

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் கியூடெக்-கரித்தாஸ் உயிர்ப் பூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

அனர்த்த காலத்தில் இழந்த கல்வியை மீட்டு பரீட்சையை எதிர்கொள்வதற்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்காக நடத்தப்படவுள்ள இப்பயிற்சிப் பட்டறைகள் இன்று சனிக்கிழமையும் நாளையும் நடத்தப்படவுள்ளன.

வதிரி திரு. இருதயக் கல்லூரி, பருத்தித்துறை சென். தோமஸ் கல்லூரி ஆகிய இடங்களில் அப்பிரதேச பாடசாலைகளின் மாணவர்களுக்கும்-

பாசையூர் சென். அன்ரனிஸ் றோ.க. வித்தியாசாலையில் -

கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தி., கொழும்புத்துறை இந்து ம.வித்தி, பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.வித்தி, துரையப்பா வித்தி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அச்சூழலில் வசிக்கும் ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, தமிழ் ஆகிய பாடங்களுக்கே பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படவுள்ளன. (1-202-68)

# வல்வெட்டித்துறையில் பெற்றோல் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.18

வல்வெட்டித்துறை பிரதேச மக்களுக்கான பெற்றோல் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேச மக்களுக்கான விநியோகம் நீண்ட நாள்களாக மேற்கொள்ளப்படவில்லையெனப் பல்வேறு தரப்பினரும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே. (203)


## மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ. சங்கம்

### கிளை முகாமையாளர் பதவிக்கான (பயிற்சி) விண்ணப்பம் (அமையஅடிப்படை)

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கும் சேவை மனப்பாங்குடன் உழைக்கும் விருப்பமுடைய 18 வயது தொடக்கம் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

க.பொ.த.(சாதாரணத்தில்) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம்/எண்கணிதம்,தமிழ் என்பனவற்றை உள்ளடக்கி 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். வேலைக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தால் கோரப்படும் பிணைத் தொகை ரொக்கமாக சங்கத்தில் செலுத்துதல் வேண்டும். இதற்கான வட்டி சங்கத்தால் வழங்கப்படும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 25.11.2006 இற்கு முன்னர் 'தலைவர், மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம், மானிப்பாய்' எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பவும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கிளை முகாமையாளர் (பயிற்சி) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்.

## வெதுப்பகம் குத்தகைக்கு

ஊர்காவற்றுறை வசந்தா பேக்கரி மாதாந்த அடிப்படையில் குத்தகைக்குக் கொடுக்கப்படும்.
சந்திக்கும் நேரம் 10 மணி - 2 மணி
விவரங்களுக்கு -
தலைவர்,
யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து.)
64, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(55316)


# வலி.தென்மேற்கில் டெங்கு, சிக்குன்குனியா நோய்த்தடுப்பு பிரசாரங்கள் தீவிரம்

## சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடவடிக்கை

வலி.தென்மேற்கு,நவ.18

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வலி.தென்மேற்கு மற்றும் வலி. மேற்கு பிரதேச சபைகளுடன் இணைந்து டெங்கு நோய்த்தடுப்பு, சிக்குன்குனியா நோய்த்தடுப்பு ஆகியன பற்றி தீவிர பிரசார நடவடிக்கைகளையும் முன்னெச்சரிக்கையான தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

பொது சுகாதார பரிசோதகர்கள் தத்தமது பகுதிகளிலுள்ள சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுநல நிறுவனங்களில் இது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். அத்துடன் கிணறுகளுக்கு 'குளோறின்' இடும் பணிகளும் சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (203-135)

# அடிப்படை கட்டுமானப் பயிற்சிக்கு 50 பேர் தெரிவாகியுள்ளனர்

கைதடி,நவ.18

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட அடிப்படைக் கட்டுமான தொழில்நுட்பச் சான்றிதழ் பயிற்சி நெறிக்கு நேர்முகத் தேர்வு மூலம் 50 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவானவர்களை எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் கேட்டுள்ளார்.

குறித்த தினத்தில் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் இப்பயிற்சியில் இருந்து தாமாகவே விலகியவர்களாகக் கருதப்படுவர் எனவும் அவர் கூறியுள்ளார். நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரத்தை உதயன் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (1-203)

# வெளிமாவட்ட கல்வியாளர்களுக்கு ஒக்ரோபர் மாத முற்பணம் வழங்க அனுமதி

தற்சமயம் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது கடமைக்குச் செல்லமுடியாமல் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான ஒக்ரோபர் மாதத்திற்குரிய சம்பள முற்பணக் கொடுப்பனவுகள் இம்மாதம் வழங்கப்படவுள்ளன.

ஒக்ரோபர் மாதத்திற்கான சம்பள முற்பணக் கொடுப்பனவை மட்டும் வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள்ளது என்றும் -

இந்த மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் சம்பந்தப்பட்ட வெளிமாவட்ட ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான வரவு குறித்த பதிவுகள் எவையும் மேற்கொள்ள அனுமதிக்கக் கூடாதென -

வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்துள்ளார் எனவும் -

யாழ். வலயப் பணிப்பாளர் தெரிவித்தார். (1-111)

# மாதகல் சங்கக் கிளை உடைத்து பங்கீட்டுப் பொருள்கள் திருட்டு

வலி.தென்மேற்கு,நவ.18

இரவு வேளையில் பண்டத்தரிப்பு பல நோ. கூட்டுறவுச் சங்கத்தின் 25ஆம் இலக்கக் கிளையான மாதகல் காஞ்சிபுரம் கிளை உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இத்திருட்டுச் சம்பவத்தில் சங்கக் கிளையில் காவலாளியை கட்டி வைத்துவிட்டு கிளையின் முன்பக் கதவை உடைத்து உட்சென்ற திருடர்கள் அங்கிருந்த செத்தல் மிளகாய், மல்லி, உள்ளி, பால்மா பக்கற்றுகள் உட்பட பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

பங்கீட் அட்டைக்கு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படவிருந்த பொருள்களும் திருடப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி இளவாலை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-135)

# அமைய அடிப்படையில் தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்.ப.நோ.கூ. சங்கத்தினரால் அமைய அடிப்படையில் களஞ்சிய (கிளை) முகாமையாளர் பதவிக்கு 28 பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கு இன்றுமுதல் எதிர்வரும் 25ஆம் திகதிவரை பயிற்சிகள் வழங்கப்படவள்ளன.

உரியவர்களை இன்றுகாலை 8 மணிக்கு யாழ்.ப.நோ.கூ. சங்கத்தின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

தெரிவானவர்களின் விவரம் வருமாறு:-

ந.சுரேன் - அரியாலை, வ.சிந்துசன் - மானிப்பாய் வீதி, ப.ராஜ்குமார் - கொழும்புத்துறை, வி.றஜீவன் - கே.கே.எஸ். வீதி, அ. றொபின் டனிஸ்ரன் - கொய்யாத்தோட்டம், சி.சுதாகரன் - கொழும்புத்துறை வீதி, ரா.சத்தியசுதாகர் - கொழும்புத்துறை வீதி, ப.வ.பிரியாந்தன் - சென்.ஜேம்ஸ் வீதி, து.ஈசன் - கச்சேரி நல்லூர் வீதி, ப.டினேசன் - கொழும்புத்துறை, த.நிசாந்தன் - குருநகர், து.சிவகாந்தராஜன் - நாவாந்துறை, க.சதானந்தர் - கொழும்புத்துறை, ப.சுதாகரன் - மானிப்பாய் வீதி, சே.தவனேஸ் - அரியாலை மேற்கு, இரா.றிகேன்சன் - குருநகர், ரட்ணசிங்கம் ஜெனன் - சுண்டிக்குளி, டொ.ஜீவகன் - பாஷையூர், யூ.அன்ரன் றஞ்சித்குமார் - குருநகர், சேகர் கிறிஸ்ணறமணா - கந்தர்மடம், ச.சரூபன் - சுண்டிக்குளி, சி.தனேஸ்குமார் - கன்னாதிட்டி லோன், எஸ். அஜந்தன் - குருநகர், செ.றொசாந்தன் - பாஷையூர், ஆ.கன்சியுஸ் - கொழும்புத்துறை, ந.ரதிகுமார் கொண்டலடிலேன், நல்லூர், த.கென்றி றீகன் - சுண்டிக்குளி, பெ.பரீரன் - அரசடி வீதி, நல்லூர். (203)

# கணனி கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

கைதடி,நவ.18

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத் திற்கு இவ்வருடத்திற்கான பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாவை கணனி கொள்வனவுக்காக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா ஒதுக்கி இருப்பதாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அறிவித்துள்ளது. (203-75)


## அரசாங்கக் கேள்வி அறிவித்தல்

### சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்
### பால் தவிர்ந்த சமைத்த/உலர் உணவு வழங்கல் - 2007

மேற்படி விடயமாக இதே பத்திரிகையில் 20.10.2006 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்குப்பட்ட விளம்பரம் தொடர்பாக மேலும் தெரிவித்துக்கொள்வதாவது, 2007ஆம் வருடத்தில் வேலையாட்களைத் தவிர்த்து நோயாளர்களுக்கு மட்டும் சம்பந்தப்பட்ட வைத்தியசாலைப் பொறுப்பு வைத்திய அதிகாரியால் உணவுக் கட்டளைகள் வழங்கப்படும். இதற்கு அமைவாக உத்தரவாத முறி ஒப்பந்தத் தொகையின் 5 % ஆக சமர்ப்பித்தல் போதுமானது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
**வலன்ரைன் டினேஸ்**
அவர்களின் அன்புத் தந்தை
**இராசையா விக்ரர் இராசரட்ணம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்,
யாழ் மத்திய கல்லூரி.

## நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி நகர மைந்தன்
**நடராஜா ரவிராஜ்**
(நா. உ. யாழ். மாவட்டம்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள், பிரதேசசபை,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 உள்ளூராட்சிச் சபைகள் புதிதாக ஆரம்பம்

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் மேலும் 6 உள்ளூராட்சிச் சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிய வர்த்தமானியில் 4 மாவட்டங்களில் 6 உள்ளூராட்சிச் சபைகள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில்- கிண்ணியா நகரசபை, வெருகல் பிரதேச சபை என்பனவும் அம்பாறை மாவட்டத்தில்- காரைதீவு பிரதேச சபை, நாவிதன் வெளி பிரதேச சபை என்பனவும் மன்னார் மாவட்டத்தில் - மன்னார் நகர சபையையும் யாழ்.மாவட்டத்தில் - காரைநகர் பிரதேச சபையும் உருவாக்கப்பட்டுள்ளன - என்றார். (202-95)


**சிங்கப்பூர், மலேசியாவில் வேலை வாய்ப்புடன் கூடிய கற்கைகள்**

- Hotel Management (Allowance / month - 50, 000/=)
- Travel & Tourism ( Allowance / month - 40, 000/=)
- Aircraft Maintenance
- Automotive Engineering
- Civil Engineering
- Mechanical, Electrical & Electronics
- Computer Science, Computer Eng.
- Business Admin., Marketing, ACCA

★ குறைந்த தகைமை - G.C.E. (O/L)
★ 3ஆம் ஆண்டு UK, Australia இல் கல்வி

சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 - 12.30 மணி வரை தொடர்பு கொள்ளவும்

GOLDEN EDUCATION SERVICES
C/O - SPIDER GAMES SPOT
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(இந்து ஆரம்ப பாடசாலை அருகில்)
தொ.பே : 5503

புதிய பிரிவுகள் JANUARY ஆரம்பம்

(55284)



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8[illegible] 0,0777- 222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Micro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 20/11/2006 - 08.30

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 17/11/2006, 18/11/2006, 19/11/2006, 22/11/2006 ஆகிய திகதிகளில் ஆரம்பமாகின்றது.

3 மாதகால
**Diploma in Computerized Accounting & Tally**
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Batch I :- 18/11/2006 Batch I:- 19/11/2006


# 36 தபால் பொதிகள் தெற்கே அனுப்பப்பட்டன

நல்லூர்,நவ.18

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திலிருந்து நேற்றுமுன்தினம் 36 தபால் பொதிகள் தென் பகுதிக்கு அனுப்பும் பொருட்டு காங்கேசன் துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட 364 தபால் பொதிகளும் தரம்பிரிக்கப்பட்டு உடன் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தபால் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (1-111-79)

# தீவகக் கல்வி வலய ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.18

தீவகக் கல்வி வலயம் நடத்திய வலயத்தின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரம் வெளியிடப்பட்டுள்ளன.

சி.சுபந்தினி (புனித மரியாள் பெண்கள் பாடசாலை), ப.இராஜேஸ்வரன் (சரவணை சின்னமடு றோ.க.வித்தியாலயம்), திருமதி த.சிவநாதன் (புனித மரியாள் பாடசாலை) ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களையும்-

த.தயாநிதி (நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம்), திருமதி க.நடராஜலிங்கம் (நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம்), திருமதி கோ.வசீகரன் (புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்) ஆகியோர் ஆறுதல் பரிசில்களையும் பெற்றுள்ளனர். (202)

# நகரணி சஞ்சிகை வெளியீடு

தென்மராட்சி,நவ.18

சாவகச்சேரி நகரசபையின் நகரணி காலாண்டு சஞ்சிகை - இதழ் 2 அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

நகரசபையினால் இக் காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள், செயற்பாடுள் மற்றும் விவரங்களுடன் நுணாவில் பொது நூலக செயற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. (202)


**பிரசவத்திற்குத் தேவையான பொருள்களுக்கு**

த மதர் அன்ட் சயில்ட்
(நாகம்ஸ் சினிமா எதிரில்)
சுன்னாகம். (55245)



**வீடு வாடகைக்கு**

யாழ்.நகர், சிறாம்பியடி வீதியில் ஆறு அறைகள், இரண்டு சமையலறைகள், இரண்டு கோல்கள் வீட்டுடன் கூடிய இரண்டு மலசல கூடங்கள் மற்றும் வாகனங்களுக்கான பெரிய தரிப்பிட வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. வெளிநாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 222 8472, 222 8247 (55288)


## நினைவுப் பிரார்த்தனை அழைப்பு



**அன்புடையீர்!**

20.08.2006 அன்று இறைபதம் அடைந்த எமது சகோதரர் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

அமரர் **சின்னத்தம்பி சிவமகாராசா**

அவர்களின் இறுதிநாள் நிகழ்வுகளில் கலந்து அனுதாபம் தெரிவித்தமைக்கு மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் நினைவாக நாளை (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(55263)

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்)

**சகோதரர்கள்**
திரு.சி.கைலைமகள்,
திருமதி ந.பெரியதம்பி, திருமதி [illegible]

(55263)

## தனங்களப்பு வீதி சேதம்

சாவகச்சேரி இந்து மயானத்திற்குச் செல்லும் தனங்கிளப்பு வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

சாவகச்சேரி சந்தியிலிருந்து மயானம் வரையான ஒருகிலோ மீற்றர் தூரமான இவ் வீதியில் பல இடங்களில் சேதம் ஏற்பட்டுக் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

தற்போதுமழை காலமாதலால் இக் குழிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மயானத்திற்கு நடந்து செல்லும் பொது மக்கள் பெரும் சிரமங்களைஎதிர்நோக்குகின்றனர்.

## அருள் ஒளி வெளியீடு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தினால் மாதாந்தம் வெளியிடப்படும் அருள் ஒளிசஞ்சிகை ஐம்பதாவது வெளியீடாக நேற்று முன்தினம் கலாநிதி துர்க்கா துரந்தரி செல்வி தங்[illegible] [illegible]யால் வெளியிடப்பட்டது. (202-68)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 - 01 - 1926



விண்ணில் 18 - 11 - 2000

**அமரர் பொன்னம்பலம் தர்மலிங்கம்**

திதி: 27.11.2006

என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி...

85/3 ஆனந்தன்வடலி வீதி,
கொழும்புத்துறை. - குடும்பத்தினர்.

(55293)

## முதலாம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு 29 . 06 . 1944



உதிர்வு 29 . 11 . 2006

அமரர்
**சண்முகவடிவேலு இராஜசேகரம்**
[முன்னாள் பொது முகாமையாளர், வலி.கிழ (தென்-பகுதி) பல நோ.கூ.சங்கம், நீர்வேலி]

ஆண்டொன்று சென்றதையா ஆறவில்லை எம் துயரம்
அதற்குள் உமது அன்புத் தம்பியையும் அழைத்துவிட்டீரே!
ஆறாது எம் துயரம் ஆண்டு பல சென்றாலும்
ஆண்டவனை வேண்டுகின்றோம் உமது ஆத்மா சாந்தி பெற

நீர்வேலி மத்தி, நீர்வேலி. (55269) குடும்பத்தினர்.

## 6ஆம் மாத நினைந்துருகலும் நன்றி நவிலலும்

இன்பத்தின் மடியில் 24 . 11 . 1975



துன்பத்தின் பிடியில் 21 . 05 . 2006

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
**செல்வி கந்தசாமி பரமேஸ்வரி (தேவி)**

ஆழிப்பேரலை போல் வந்த செய்தி - எமக்கு
ஆறாத காயமம்மா எம் உயிர் உள்ளவரை
கலையாத ஓவியமே! - கண்மணியே!
வையகத்தில் நாம் வாழும் காலம்வரை
எமக்கென்று இனியின்பம் ஏதுமில்லை
வானத்து நிலவாக நிதம் வந்து
வண்ண முகம் காட்டிச் செல்வாயா?
உன் வரவுக்காய் நாளும் காத்திருக்கும்...

4ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (55255) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லர் பாலசிங்கம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் பாலசிங்கம் (புனித பரி.யாக்கோபு தேவாலய பராமரிப்பாளர்) 16.11.2006 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கலைவாணி, புனிதஜோதி விக்னேஸ்வரன், யசோதை, யர்மிலா (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின்இறுதிக் கிரியைகள் 82/23, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலையில் இன்று (18.11.2006) சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று, நல்லடக்க ஆராதனைகள் புனித பரி.யாக்கோபு தேவாலய சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
82/23, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை. (55296) பிள்ளைகள்.

### திருமதி சின்னையா செல்லம்மா

டச்றோட், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா செல்லம்மா (15.11.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சடாச்சரம், இராஜபூபதி (தாதிய உத்தியோகத்தர் - மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயும் இராஜசேகரத்தின் (சிமெந்துக் கூட்டுத்தாபன ஓய்வு பெற்ற ஊழியர்) மாமியும் இராஜமுகுந்தன் (அமெரிக்கா), இராஜசாந்தன் (சம்பத் வங்கி- வவுனியா), இராஜபிரதாயினி (ஆசிரியை - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.11.2006 வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டச் றோட், சாவகச்சேரி. (55292) ச.இராஜசேகரம் (மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கபட உள்நோக்கத் திட்டத்துடன் விடுக்கப்படும் சமாதான அழைப்பு

பாதுகாப்புச் செலவினத்துக்கு அதிக தொகையை - அதாவது இரட்டிப்பு மடங்கை ஒதுக்கி ஒரு யுத்தத் தயாரிப்பு வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த இலங்கையின் நிதி அமைச்சரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ, வழமை போல - கடந்த இருபது ஆண்டு காலமாக தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்கள் விடுக்கும் - சமரச அறிவிப்பையும் அத்தோடு சேர்த்துக்கொள்ளத் தவறவில்லை.

பாதுகாப்பு அமைச்சுக்கான இரட்டிப்பு நிதி ஒதுக்கீட்டில் பெருமளவு மூலதனச் செலவினமாகக் காட்டப்பட்டிருக்கின்றமை அரசின் உள்நோக்கத்தை அப்படியே அம்பலப்படுத்துகின்றது. யுத்தத் தளபாடங்களை வாங்கிக் குவிப்பதற்காக - பெரும் போருக்கான முன் ஆயத்தமாக - நாட்டின் பெருமளவு நிதியை நாசமாக்கத் திட்டமிட்டிருக்கும் அரசு, மறுபுறத்தில் ஆயுதங்களைக் கைவிட்டு, அமைதித் தீர்வு காண்பதற்காக சமாதானப் பேச்சுக்கு வருமாறு தமிழர் தரப்புக்கு அழைப்பு விடுக்கின்றது.

தமிழர்களின் நியாயமான - சட்டபூர்வமான - அபிலாஷைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றின் அடிப்படையிலான தீர்வு ஒன்றை - நீதியான இணக்கப்பாடு ஒன்றைத் தமிழர்களோடு செய்து கொள்ளும் இதயசுத்தியான எண்ணமோ, வலுவான பற்றுறுதியோ, திடசங்கற்பமோ தற்போதைய தென்னிலங்கைத் தலைமைக்கு இல்லவே இல்லை என்பது வெளிப்படை.

ஈழத் தமிழர்கள் தனியான இனம், அவர்களுக்கு நிலத் தொடர்புடைய தனியான பூர்வீகத் தாயகம் உண்டு. தமது தலைவிதியை - அரசியல் முறைமையை - தாமே தீர்மானித்துக்கொள்ளும் சுயநிர்ணய உரிமை அவர்களுக்கு உண்டு என்ற தமிழர் தரப்பின் மாற்ற முடியாத - நியாயபூர்வமான - அடிப்படை உள்ளக்கிடக்கையை முற்றாக நிராகரிக்கும் தென்னிலங்கை பௌத்த - சிங்கள மேலாண்மை வாதத்தின் ஒட்டுமொத்த வடிவமே இப்போது ஆட்சி அதிகாரத்தில் உள்ளது.

இத்தகைய பேரினவாதத் தலைமைகளை நம்பி - போரியல் போக்கில் முனைப்புடன் நிற்கும் தென்னிலங்கை, நீதியான தீர்வைத் தரும் என்று நம்பி - தமிழர் தரப்பு ஆயுதங்களைக் கைவிட்டு, பேச்சுக்குப் போவது என்பது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பாகும்.

விட்டுக் கொடுப்பு எதற்கும் தயாரின்றி ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்ற அடக்குமுறைத் திட்டத்துடன் தென்னிலங்கையின் மஹிந்த அரசு உறுதியாக இருப்பது வெள்ளிடை மலை.

ஏற்கனவே நடந்த ஆறு சுற்று அமைதிப் பேச்சுக்களையும், அவற்றின் காரணமாக எட்டப்பட்ட அடிப்படை இணக்கங்களை அடியோடு நிராகரித்து -

தனது அரசு நடத்திய 'ஜெனிவா -I' பேச்சின்போது இணக்கம் காணப்பட்ட - துணை ஆயுதப் படைகள் உட்பட அனைத்து ஆயுதக் குழுக்களினதும் ஆயுதங்களைக் களைந்து அவற்றை அப்புறப்படுத்தும் தீர்மானத்தையும் செயற்படுத்த மறுத்து -

மறுபுறத்தில் தனது படைகள் மூலமும், தனது படைகளின் புலனாய்வுத் துறைகளின் கீழ் இயக்கப்படும் துணைப் படைகள் மற்றும் ஒட்டுக்குழுக்கள் மூலமும் தமிழர் தாயகம் மீது பெரும் இராணுவக் கொடூரப் போக்கைக் கட்டவிழ்த்து விட்டு, தமிழர் தாயகத்தில் கொலைவெறியையும், மனிதப் பேரவலத்தையும் திணித்துக்கொண்டு -

ஆயுதங்களைக் கைவிட்டு அமைதிப் பேச்சுகளுக்கு வாருங்கள் என்று தமிழர்களைப் பார்த்து தென்னிலங்கை கேட்பதும், 'சாத்தான் வேதம் ஓதுவது போல' சமாதான நெறிமுறைகள் குறித்து நியாயம் பிளப்பதும் வேடிக்கையானவை, அர்த்தமற்றவை.

சரி, ஆயுதங்களைக் கைவிட்டு அல்ல, ஆயுதங்களை வைத்துக் கொண்டும் கூட பேச்சுக்குப் போவதற்கு இலங்கை அரசிடம் என்ன சமாதானத் திட்டம் இருக்கின்றது?

அத்தகைய திட்டம் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பிப்பதற்கு ஒரு குறுகிய கால அவகாசம் வழங்கித் தானே யுத்த நிறுத்த நிலைமையை நீடிக்கும் தமது முடிவைக் கடந்த மாவீரர் தின உரை மூலம் தமிழர் தரப்பின் தலைவர் வெளியிட்டிருந்தார்?

அந்த அவகாசம் வழங்கப்பட்டு ஓராண்டு கடந்தும் மஹிந்தரின் தலைமை, இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தான் வழங்கப் போகும் திட்டம் இதுதான் என்பதை இன்னும் வெளிப்படுத்தவே இல்லை.

கடந்த மாத இறுதியில் ஜெனிவாவில் தோல்வியில் முடிவுற்ற அமைதிப் பேச்சுகளின்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நீங்கள் வைத்திருக்கும் தீர்வுத் திட்டம்தான் என்ன என்று அரச தரப்புப் பிரதிநிதிகள் குழுவைப் பார்த்து, விடுதலைப் புலிகளின் பேச்சுக் குழுத் தலைவர் சு.ப. தமிழ்ச்செல்வன் கேட்டபோது, அரசுக் குழு வாயடைத்து அடங்கிப் போனமை தெரிந்த சமாச்சாரம்தான்.

இவ்வாறு ஈழத் தமிழர்களுக்கு நியாயம் செய்யும் மனப்பக்குவமோ, திடசித்தமோ, விருப்பமோ இல்லாமல் - நீதியான தீர்வு ஒன்றை வழங்கும் திட்டமும் இல்லாமல் - போர் முனைப்பில் பேரார்வம் கொண்டுள்ள தென்னிலங்கை அரசு, ஆயுதங்களைக் கைவிட்டு அமைதி முயற்சிகளுக்குத் திரும்புமாறு தமிழர் தரப்புக்கு அழைப்பு விடுப்பது, அதன் உள்நோக்கத்தை அப்பட்டமாகப் புலப்படுத்துகின்றது.

தமிழர் தரப்பின் உரிமைப் போராட்டத்துக்கு அடிநாதமாகவும், வலுவாகவும் விளங்கும் அவர்களின் ஆயுதப் பலத்தைத் தகர்த்து, அதன் உரிமைக் குரலை நசித்து, தமிழர் தாயகத்தை முற்றாக ஆக்கிரமித்து, தனது முழு அடக்குமுறை ஆட்சியைத் தனது விருப்பப்படியான தீர்வாகத் தமிழர் மீது திணிப்பதே அதன் நோக்கு.

அந்த முனைப்பில் - கனவில் - தீவிரமாக இருக்கும் மேலாண்மை வாதச் செருக்குடைய இந்த அரசு, அதனை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளவே, ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சு மேசைக்கு வாருங்கள் என்று சமாதான நாடக அழைப்பை விடுக்கின்றது.

தமிழர் தாயகத்தில் - களத்தில் - யுத்த வெறி முகத்தையும், சர்வதேச சமூகத்துக்குச் சமாதானப் பிரியர் வேடத்தையும் காட்டும் கொழும்புத் தலைமையின் உண்மைத் தோற்றத்தை உலகம் இப்போது தெளிவாக உணரத் தொடங்கி விட்டது.

இப்போது வாஷிங்டனில் கூடவிருக்கும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகள் இந்நிலைமை குறித்து, தீவிரமாகப் பரிசீலித்து, திட்டவட்டமான முடிவுகள் சிலவற்றை எடுத்து அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் தொடர்ச்சியாகவும், இப்போது ஜனாதிபதி மஹிந்தர் விடுத்திருக்கும் - ஆயுதங்களைக் கைவிட்டுப் பேச்சுக்கு வாருங்கள் என்ற - அழைப்புக் குறித்துச் சில முடிவுகளைத் தலைவர் பிரபாகரன் எதிர்வரும் 27 ஆம் திகதி தனது மாவீரர் தின உரையில் விடுப்பார் என எதிர்பார்க்கலாம். அந்த அறிவிப்புகள் களத்தில் கனதியான - பல மாற்றங்களுக்கு வழி கோலினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# அத்தியாவசியப் பொருள்களை கூடுதல் விலைக்கு விற்கும் வர்த்தகர்கள்மீது சட்ட நடவடிக்கை

## யாழ். அரச அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.18

குடாநாட்டில் அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். யாழ். அரச அதிபர் கே. கணேஷ் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல்வேறு கட்டங்களில் வேண்டுகோள்கள் மாவட்ட செயலகத்தினால் விடுக்கப்பட்ட போதிலும், யாழ். மாவட்டத்தில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி வர்த்தகர்கள், நடைபாதை வியாபாரிகள் பன்மடங்கு அதிகரித்த விலைகளில் பொருள்களை விற்பனை செய்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

2003ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் சமுதாய வாழ்க்கைக்கு அவசியமெனக் கருதப்படும் சகல பொருள்களும் கீழ்வரும் சட்ட விதிகளுக்கு அமைவாகவே வியாபாரம் செய்யப்படல் வேண்டும்.

* விலைப் பட்டியலை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.
* பொருள்களை வைத்துக் கொண்டு விற்பனை செய்யமறுத்தல் ஆகாது.
* நிபந்தனைக்கமைய பொருள்களை விற்பனை செய்தல் கூடாது.
* வியாபார நிலையத்திலோ அல்லது வேறு இடங்களிலோ பொருள்களைப் பதுக்கி வைத்தல் கூடாது.
* ஏமாற்றி விற்பனை செய்தல் கூடாது.
* பாவனையாளரால் கோரப்படுமிடத்து பற்றுச்சீட்டு வழங்கப்படல் வேண்டும்.
* நியாயமற்ற அதிகவிலையில் பாவனைப் பொருள்களை விற்றல் ஆகாது.

11.08.2006 இற்குப் பின்பு எந்தவொரு தனியார் வியாபாரியும் பொருள்களை யாழ். மாவட்டத்திற்குத் தருவிக்கவில்லை. அரசாங்கத்தின் ஏற்பாட்டில் மாத்திரம் பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன. அத்தகைய பொருள்கள் தீர்மானிக்கப்பட்ட விலையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலமாகவும் வழங்கப்படுகின்றன.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருள்களை விற்பனை செய்கின்றன. 11.08.2006 இற்கு முன்பு கொண்டுவந்த பொருள்களை தற்கால அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி கூடுதல் விலைக்கு விற்பனை செய்வது சட்டத்திற்கு முரணானது.

### சட்டப்படி குற்றம்

மேலும் 11.08.2006இற்கு முன்பு தருவிக்கப்பட்ட பொருள்களாயின் 11.08.2006 இற்கு முன்பாக விற்கப்பட்ட விலைக்கும் மேலாக தற்போது விற்பனை செய்வதும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும் பொருள்களை வாங்கி அவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதும் சட்டப்படி குற்றமாகும்.

சகல வர்த்தகர்களும் இவ்விடயத்தில் தமது பரிபூரண ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேற்படி சட்ட விதிகளுக்கு அமைவின்றி அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் வியாபாரத்தை மேற்கொள்ளும் சகல வர்த்தகர்களுக்கும் எதிராக பாவனையாளர் அதிகார சபை அதிகாரிகளினால் திடீர் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது. (அ-1)

# கடன் பெற்று வாங்கிய பங்கீட்டுப் பொருள் அபகரிப்பு!

தென்மராட்சி, நவ. 18

பங்கீட்டு அட்டைகளுக்குப் பெற்ற 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பட்டப்பகலில் திருடர்களால் அபகரிக்கப்பட்டன.

"இரப்பானைப் பிடித்ததாம் பறைப்பிராந்து" என்ற பேச்சு வழக்குக்கு உதாரணமாக நடந்த இச்சம்பவம் மட்டுவில் மத்தி, சிவன் கோயிலடியில் அண்மையில் இடம் பெற்றிருக்கிறது.

இரண்டு பங்கீட்டு அட்டைகளுக்கு தனது பொருள்களை வாங்கி தனது வீட்டில் வைத்துவிட்டு, குடும்பஸ்தர் ஒருவர் அருகில் உள்ள ஆலயப் பூசைக்குச் சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் -

இப் பொருள்களுடன் வீட்டியிருந்த 2 ஆயிரம் ரூபா பெறுமதியான சுவர் மணிக்கூட்டினையும் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

தொழில்கள் இல்லாத இவ்வேளையில் கடன் பெற்று பங்கீட்டு அட்டைக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்கிய போதிலும் அவை திருட்டுப் போனதில் முழுக்குடும்பமும் பல நாள்கள் பட்டினியால் வாடுவதாகவும் கூறப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த தியாகராசா வைத்திஸ்வரன் என்பவரின் வீட்டிலேயே இத்திருட்டு இடம்பெற்றது. கடந்த வருடம் இதே வீட்டில் பெறுமதிமிக்க பொருள்கள் திருடர்களால் அபகரித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# ஒருகிலோ மீன் ஆயிரம் ரூபா!

நல்லூர்,நவ.18

நம்பினால் நம்புங்கள் யாழ்ப்பாணம் பண்ணை, சின்னக்கடை, கல்வியங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள மீன் சந்தைகளில் நேற்று மீன் வகைகள் கிலோ ஒன்று ஆயிரம் ரூபாவாக விற்பனையாகின.

இதேசமயம் நகரப்பகுதியில் முட்டையின் விலையும் என்றுமில்லாதவாறு உயர்ந்துள்ளது. முட்டை ஒன்று ரூபா 40 முதல் ரூபா 50 இற்கு விற்பனையாவது குறிப்பிடத்தக்கது. (1-111)

# மதிய உணவுக்கான பொருள் விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் உலக உணவுத் திட்ட கல்விக்கான உணவு செயற்திட்டத்தின் கீழ் தரம் 1 தொடக்கம் 9 வரையான மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும். யாழ். அரச அதிபர் இதுபற்றிய தகவலை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைவாக உணவுப் பொருள்களுக்கான வழங்கற் கட்டளைகள் யாழ்ப்பாணம், நல்லூர் ப.நோ.கூ. சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. இப்பாடசாலைக்குரிய உணவுப் பொருள்கள் இன்றும் நாளையும் சகல பாடசாலைகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி உணவுப் பொருள்களைப் பெறுவதற்கு ஏதுவாக மேற்படி திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளை இன்றும் நாளையும் திறந்து வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (1)

# குடாநாட்டில் அடுத்துவரும் நாள்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும்!

## திறந்த இடங்களில் நடமாடுவதைத் தவிர்க்கவும்

யாழ்ப்பாணம், நவ.18

அடுத்துவரும் நாள்களில் குடாநாட்டில் பரவலாக இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யலாம். அந்த வேளைகளில் பொதுமக்கள் திறந்த வெளிகள் மற்றும் பாதுகாப்பு இல்லாத இடங்களில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் காலநிலை அவதான நிலையத்தின் யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் பொது மக்களை இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

வங்காள விரிகுடாக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் மேலும் தொடரக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே இந்த நாள்களில் வானொலி, தொலைக்காட்சி, மற்றும் மின்சார உபகரணங்களை அவதானமாகக் கையாள வேண்டும்.

குடாநாட்டில் இவ்வருடத்தில் கடந்த வியாழக்கிழமை வரை 755.8 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. கடந்த வருடம் நவம்பர் இறுதிவரை 554.9 மில்லி மீற்றர் மழையே பதிவாகியிருந்தது - என்றார் அவர். (1-202-88)

# யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தமிழ்த்தின மாவட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இன்றும் நாளையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

வலய மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

தனியாள் பங்குபற்றும் போட்டிகள் இன்றும் குழுக்கள் பங்குபற்றும் போட்டிகள் நாளையும் - இடம்பெறவுள்ளன. (1-111)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் நேற்று சிரமதானப் பணிகள்

கிளிநொச்சி,நவ.18

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் கழகப் பணியாளர்கள் மற்றும் தொண்டர்களால் நேற்றுச் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வைத்தியசாலையின் நோயாளர்கள் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்ற உள்ளக விடுதிகள், அந்தந்த விடுதிகளை அண்டிய பொதுப் பாவனைக்கான மலசல கூடங்கள், குளியல் அறைகள் மற்றும் அலுவலக வளாகங்கள் வைத்தியசாலையின் வெளிப்புறங்கள் என அனைத்துப் பகுதிகளும் சிரமதானம் மூலம் சுத்திகரிக்கப்பட்டன.

தற்போதைய மழைக்கால சூழ்நிலையால் ஏற்படவிருக்கும் அசாதாரணமான சுகாதாரச் சீர்கேடுகளால் நோய்கள் பரவாமல் இருப்பதற்கும், நோயாளர்கள் மேலும் பாதிக்கப்படாது இருப்பதற்கு முன்னேற்பாடாகவே இந்த சிரமதானப் பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டது. (1-202)

## நாளை

கார்த்திகை 03
ஞாயிற்றுக்கிழமை
19.11.2006
திதி : சதுர்த்தசி
பின்னிரவு : 02.58
நட்சத்திரம் : சுவாதி
முன்னிரவு : 12.40
சுபநேரம் : 09.09 - 10.39
ராகுகாலம் : 04.39 - 06.09

# நேற்று வகுப்புகளை பகிஷ்கரித்த மாணவர்

யாழ்ப்பாணம்,நவ.18

கடந்த வாரம் இரு பாடசாலை மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி மாணவன் சாள்ஸ், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவன் றஜீவன் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

இச்சம்பவங்களைக் கண்டித்தே இப்போராட்டம் இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் எண்ணிக்கை ஜனாதிபதிக்கே தெரியாது

## இப்படி கூறுகிறார் ஜே.வி.பி. உறுப்பினர்

கொழும்பு, நவம்பர் 18

''அரசில் எத்தனை அமைச்சர்கள் இருக்கின்றார்கள் என்று ஜனாதிபதிக்கே தெரியாத நிலையில், இந்த வரவு - செலவுத் திட்டத்தில் கூறப்பட்டிருப்பதுபோல் எப்படி செலவினத்தைக் கட்டுப்படுத்த முடியும்? எப்படி இந்த வரவு - செலவுத் திட்டத்தை வெற்றியளிக்கச் செய்ய முடியும்?

நாட்டின் நலன் கருதி ஜே.வி.பி. முன்வைத்த யோசனைகள் அனைத்தும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிராகரிக்கப்பட்டபோது மக்களும் ஏமாற்றப்பட்டுள்ளனர். நிச்சயம் இந்த வரவு - செலவுத் திட்டம் தோல்வியடையும்.''

- இவ்வாறு ஜே.வி.பி. எம்.பி.யின் சுனில் ஹந்துனெத்தி நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில் கூறியதாவது:-

''பாதுகாப்புப் படையினர் நாட்டுக்காகப் போராடுகிறார்கள். அவர்களுக்கு இதில் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நோய் ஏற்பட்டால் 50 வீதம் காப்புறுதியை அரசு வழங்க வேண்டும் என்றும் அவர்களுக்கென்று தனியாக 2 வைத்தியசாலைகள் அமைக்கப்படவேண்டும் என்றும் நாம் யோசனை தெரிவித்தோம். ஆனால், அந்த யோசனை இதில் சேர்க்கப்படவில்லை.

அரச ஊழியர்களுக்கு 50 வீத சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் என 2006 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் உறுதியளிக்கப்பட்டதுபோல் 2007 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்திலும் உறுதியளிக்கப்பட நாம் அதனை முன்வைத்திருந்தோம். அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதற்கு நன்றி.

ஆனால், நாட்டின் நலன் கருதி நாம் முன்வைத்த யோசனைகள் எல்லாம் நிராகரிக்கப்பட்டுவிட்டன. 'மஹிந்த சிந்தனை,' மக்களின் நிகழ்ச்சி நிரலிலிருந்து வேறு திசை நோக்கிப் போவதைத்தான் நாம் காண்கிறோம் - என்றார்.

# யுத்தநிறுத்த ஒப்பந்தம் இப்போது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் விசேட தூதுவராக இலங்கை வந்திருக்கும் அயர்லாந்தின் முன்னாள் அமைச்சர் போல் மேர்பி. வட அயர்லாந்தில் சமாதான முன்னெடுப்புகள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதனை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் விளக்கும் பொருட்டே போல் மேர்பி இங்கு பிரிட்டிஷ் பிரதமரால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதன்பிரகாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் விசேட தூதுவர் மேர்பி சந்தித்துப் பேச்சுகளை நடத்தியிருந்தார்.

இருதரப்புகளையும் சந்தித்த பின்னர் சர்வதேச ஊடகம் ஒன்றுக்குஅளித்த செவ்வியில், இலங்கை விவகாரம் வட அயலார்ந்தின் 'காபன் கொப்பி' தான் என்று அவர் குறிப்பிட்டார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

வட அயர்லாந்து சமாதான முன்னெடுப்பை ஒரு பாடமாகக் கொண்டு இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் தங்களுக்கிடையே நடைபெறும் யுத்தத்தில் யாரும் வெற்றி பெறப்போவதில்லை என்பதை உணர்ந்து செயல்பட முன்வர வேண்டும்.

யுத்தத்தில் யாரும் வெற்றிபெற முடியாது என்ற உணர்வு வந்து விட் டால், முயற்சித்துப் பயனில்லை என்ற நம்பிக்கையற்ற நிலை கைவிடப்பட்டால், எந்த ஒரு விடயத்துக்கும் தீர்வைக் கண்டுவிட முடியும். இதனையே வட அயர்லாந்து சமாதான முன்னெடுப்பு ஒரு பாடமாகத் தந்திருக்கிறது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அமுல் முதல் சமாதானப் பேச்சு வரை, மனித உரிமைகள் முதல் இராணுவ விவகாரங்கள் வரை, வட அயர்லாந்து பல படிப்பினைகளை இலங்கைக்கும் தந்திருக்கிறது. குறிப்பாக அரசும், விடுதலைப் புலிகளும் போருக்குக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பல படிப்பினைகளைத் தந்து கொண்டிருக்கிறது.

யுத்தத்தில் யாரும் வெற்றி பெறப் போவதில்லை என்பதைக் கள நிலையிலேயே இரு தரப்பினரும் உணர்ந்து கொண்டனர். யுத்தம் நீடிக்கலாம். ஆனால், அதில் யார் வெற்றி பெறப் போவது? என்றும் அவர் பேட்டியின் போது கேள்வி எழுப்பினார்.

இத்தகையை ஒரு வினாவே ஐ.ஆர்.ஏ. மனதிலும் எழுந்தது. கின்பென் மனதிலும் எழுந்தது. மற்ற எல்லோர் மனதி லும் எழுந்தது. ஒப்பீட்டளவில் இங்கும் அதே நிலைதான் என்பதை நாம் உணர்ந் தோம். எனவே, வட அயர்லாந்து படிப் பினை இங்கு உபயோகமாக இருக்கும் என எண்ணினோம்''

### 30 வருடங்கள் இழுபறிப்பட்டது

வட அயர்லாந்துத் தகராறு 30 வருடங்களாக இழுபறிப்பட்டது. கத்தோலிக்கக் கிறிஸ்தவ ஐரிஷ் குடியரசுவாதிகளுக்கும், பிரிட்டிஷ் ஆதரவு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தினருக்கும் இடையேயான மோதலே இது. இவர்களுக்கிடையே இடம்பெற்று வந்த மோதல்கள், 1998 ஆம் வருட பெரியவெள்ளிக்கிழமை உடன்படிக்கை மூலம் பெருமளவு முடிவுக்கு வந்தன. அமெரிக்காவே அனுசரணையாளராக இருந்து இந்த உடன்படிக்கையை ஒப் பேற்றி வைத்தது.

ஆனாலும், 2002 ஆம் ஆண்டு அரசியல் அதிகாரப் பகிர்வு விவகாரம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. மாகாண விவகாரங்களைக் கவனிக்கும் கத்தோலிக்கரையும், புரட்டஸ்தாந்தினரையும் கொண்ட சபையின் செயல்பாடுகள் 2002 முதல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த சபைக்கான புதிய தேர்தல் ஒன்று எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

### சமத்துவமும் மனித உரிமைகளும் உண்டு

பெரிய வெள்ளி உடன்படிக்கை, வட அயர்லாந்தின் அரசியலமைப்பு மூலமான தீர்வை மட்டும் கொண்டிருக்க வில்லை. சமத்துவம் மற்றும் மனித உரிமைகளையும் உடன்படிக்கை கொண் டிருக்கிறது. மொழியுரிமை, சிறைக் கைதி கள், ஆயுதக் களைவுகள் பற்றியும் உடன் படிக்கையில் உள்ளது என்றும் போல் மேர்பி விரிவுபடுத்திக் கூறினார்.

இங்கு இந்தத் தகராறு தோன்றியமைக்கு ஆரம்பத்தில் மொழியும், இனத்துவ அடையாளமும் சிறுபான்மையினர் என்பனவுமேயாகும். வட அயர்லாந்துப் பிரச்சினையும் இதேதான். அதே 'காபன் கொப்பி' தான் இலங் கைப் பிரச்சினையும்.

விடுதலைப் புலிகளிடம் வட அயர்லாந்துப் பிரச்சினையை நான் தெளிவாக விளக்கிக் கூறினேன். அதிலிருந்து பாடங்களைக் கற்குமாறும் நான் கேட்டுக் கொண்டேன்.

''வட அயர்லாந்தின் உதாரணங்களைப் பாருங்கள். கடந்த பல வருடங்களாக இழுபறிப்பட்டு, தீர்வேயில்லை என்று கைவிடப்பட்டு நம்பிக்கை அற்றுப் போன அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டவில்லையா? சமாதானம் மலர வேண்டும் என்ற நம்பிக்கையும், உறுதிப்பாடும் இருந்து விட்டால் அது நிச்சயம் சித்திக்கும் - என்று அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டியிருக்கிறேன் - என்றார் மேர்வி. (அ)

# பொன்சேகாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டங்களில் இருந்து பதவி நீடிப்பு வழங்குவதை எதிர்த்து மஹிந்தவிற்குக் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

முகமாலைச் சமரில் இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்விக்கான பொறுப்பை அண்மையில் சரத் பொன்சேகா ஏற்றிருந்தார். இந்தச் சமரில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும், பல நூறு படையினர் காயமடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

சரத் பொன்சேகாவினால் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் காரணமாக இராணுவத்தின் உயர் நிலை அதிகாரிகள், படையிலிருந்து விலகிச்செல்லும் நிலைமை ஏற்பட்டது.

இந்த விவகாரங்களே தளபதி பொன்சேகாவின் பதவி நீடிப்புக்குப் பெரும் தடைக் கல்லாக அமைந்துள்ளன என்று சுட்டிக் காட்டப்படுகிறது. (ஐ)

# நாட்டைப் பாதுகாக்கவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையல் கூறினார். அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில் தெரிவித்ததாவது:-

மஹிந்த சிந்தனையில் நாட்டில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நாம் பல அபிவிருத்தித் திட்டங்களையும் வேலை வாய்ப்புத்திட்டங்களையும்ஆரம்பித்துள்ளோம்.

ஐ.தே.க. ஆட்சியின்போது எதிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை. நுரைச்சோலை மற்றும் கொத்மலைத் திட்டத்தை எம்மால் தொடங்கிவைக்கமுடிந்தது.

ஆகக்குறைந்தது 2இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு எம்மால் போஷாக்கு உணவுகளை வழங்க முடிந்தது. ஆனால், ஒரு மாதத்துக்காவது ஐ.தே.கட்சியினால் இப்படி வழங்க முடிந்ததா? ஆனால், நாம் இவ்வாறு வழங்கியதைப் பொறுக்க முடி யாத ஐ.தே.கவினர் மோசமாக விமர்சிக் கின்றனர்.

அது மட்டுமன்றி சமாதானத்தை உருவாக்கவும் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் நாம் அர்ப்பணிப் புடன் செயற்படுகிறோம்.

தேசியப் பாதுகாப்பைப் பலப்படுத்த இந்த வரவு - செலவுத்திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஜனாதிபதி முன்னுரிமை வழங்கியுள்ளார். அது தப்பு என்று யாரும் சொல்ல முடியாது. பணம் ஒதுக்கப்பட்டது நாட்டின் பாதுகாப்புத்தானே தவிர, நாட்டைப் பயங்கரவாதிகளிடம் சிக்கவைப்பதற்கோ அல்லது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவிக்கவோ அல்ல.

அடுத்ததாக கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் சுதந்திரத்திற்கு பிறகு இந்த வரவு - செலவுத் திட்டத்தில்தான் கல்விக்கு அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, இந்நாட்டுமக்களின் சுகாதாரத்திற்காக அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமான மக்களை உருவாக்க இதன்மூலம் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

எப்படித்தான் மஹிந்த சிந்தனையையும் இந்த வரவு - செலவுத் திட்டத்தையும் எதிர்க்கட்சியினர் மோசமாக விமர்சித்தாலும் மக்கள் இந்த வரவு - செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். மஹிந்த சிந்தனை மேலும் மேலும் முன்னேறித்தான் போகிறது.

2007இல் மேலும் 8000 பட்டதாரிகளுக்கு நாம் வேலை வாய்ப்பை வழங்கவிருக்கிறோம். ஐக்கிய தேசிய கட்சியால் வழங்கப்பட முடியாமல் போனது.

திரைப்படத்துறைக்கு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் வரி விலக்கப்பட்டுள்ளது. மூடப்பட்ட தனியார்துறை ஆடைத் தொழிற்சாலைகளைத் திறக்கவும் இதன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக கிராமங்களை அபிவிருத்தி செய்யும் வாய்ப்புக்கிட்டியுள்ளது.

இன்னும் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களை நாம் முன்னெடுக்கவுள்ளோம். இந்த வரவு - செலவுத் திட்டத்தை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

- இவ்வாறு நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார். (ஐ)

# ஈழத் தமிழர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் சகல வீதிகளும் மூடப்பட்டு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும், திட்டமிட்டபடி நேற்றுக் காலை 10.30 மணியளவில் வைகோ தலைமையில் ம.தி.மு.க. தொண்டர்கள் போராட்டத்திற்கு தயாராகி நின்றனர். அவர்கள் மத்தியில் உரையாற்றிய வைகோ, தடையை மீறி போராட்டம் நடைபெறும் நாங்கள் தூதரகத்திற்குள்ளே நுழையப் போவதில்லை.

தூதரகம் அருகே உள்ள வீதியில்தான் போராட்டம் நடத்த அனுமதிகேட்டோம். ஆனாலும், அரசு அனுமதி தரவில்லை - என்று கூறினார்.

இலங்கை ஜனாதிபதி இந்தியா வரும் போது அறவழியில் நாங்கள் போராட்டம் நடத்துவோம். அவர் வரும்போது டெல்லியில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம் - என்றார் வைகோ.

பின்னர் தொண்டர்களுடன் இணைந்து ஊர்வலமாகப் புறப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அவர்களை அங்கிருந்து செல்ல பொலீஸார் அனுமதிக்கவில்லை. அங்கு வைத்து வைகோ உட்பட ம.தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் என ஆயிரம் பேரை பொலீஸார் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட அனைவரும் மயிலாப்பூர் சாயிபாபா எனும் திருமண மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வைகோவுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எல்.கணேஷன், செஞ்சி இராமச்சந்திரன், சட்டசபை உறுப்பினர்களான கண்ணப்பன், கம்பம் இராமகிருஸ்ணன் உட்பட ஏராளமானவர்கள் கைதாகியுள்ளனர்.

# குடாநாட்டு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் வந்திருப்பதாக அமைச்சு அலுவலகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவுகின்ற உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கான விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளை அகற்றி, பொதுமக்கள் முகம் கொடுத்து வருகின்ற நெருக்கடி நிலைமைகளில் இருந்து மக்களை விடுவிப்பது அமைச்சரின் யாழ் விஜயத்திற்கான முக்கிய நோக்கமாகும்.

இதேநேரம் அமைச்சரின் வருகையினை அடுத்து யாழ். மாவட்டத்திற்குத் தேவையான ஒரு தொகை மருந்து வகைகள் உடனடியாகக் கொண்டுவரப்படவுள்ளன.

தமது யாழ். அலுவலகத்தில் தங்கியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சில நாள்கள் தொடர்ந்து இங்கிருந்து பொது மக்கள், அரச உயரதிகாரிகள் உட்பட பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளையும் சந்தித்து, அந்தந்தத் துறை சார்ந்த முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எடுக்க உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உணவு விநியோகம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளை அகற்றும் முகமாக, கூட்டுறவுச் சங்க ஊழியர்களையும் சந்திக்க உள்ள அமைச்சர், மேற்படி ஊழியர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் தொடர்பிலும், கூட்டுறவுத்துறை எதிர்நோக்கி வரும் இடையூறுகள் தொடர்பிலும் கலந்துரையாட உள்ளார் - என்றும் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (அ-1)

# வாகரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவு லொறிகளைத் திருப்பி அனுப்பினர் என்று தெரிவிக்கப் படுகிறது.

வாகரை மற்றும் கதிரவெளிப் பிரதேச மக்களுக்கு அத்தியாவசிப் பொருள்களை அனுப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்திருந்தார். இந்நிலையிலேயே நேற்று அங்கு உணவுப் பொருள்களை ஏற்றிச்சென்ற வாகனங்கள் தடுக்கப் பட்டிருக்கின்றன. (ஐ)

# தமிழ்த் தேசியக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்திருக்கிறது. நாளை எங்களில் எவரையாவது கொலை செய்ய இடமுண்டு.

ரவிராஜின் கொலை தொடர்பாக தமிழ் அமைப்பு ஒன்றின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என நாம் அறிகின்றோம். இதெல்லாம் அரசின் நாடகம் என்பதை நாம் நன்கு அறிவோம்.

கைதுசெய்யப்பட்டிருப்பவர்கள் இன்னும் சில நாட்களில் விசாரணைகள் இன்றி விடுவிக்கப்படுவது நிச்சயம்.

அரசு இனவெறியுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அடியோடு இல்லா தொழிக்கும் திட்டத்துடனும் செயற்படு வது இவ்வாறான கொலை நடவடிக்கை கள் மூலம் நன்றாகத் தெரிகிறது. ஆனால், அரசு பின்விளைவை சற்றும் யோசிக்காம லேயே இவ்வாறு செயற்படுகிறது.

ஏ-9 பாதையை மூடிக்கொண்டு எமது மக்களை பட்டினியில் போட்டுக்கொண்டிருக்கிறது. இந்த அரசு, புலிகள் இந்தப் பாதையில் கப்பம் அறிவிடுகின்றனர் என்றும் புலிகளைப் பலமிழக்கச்செய்யவும் பாதையை மூடியுள்ளோம் என்றும் அரசு கூறுகின்றது.

அப்படியென்றால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்பு ஆனையிறவு, கட்டுநாயக்கா விமானநிலையம், முல்லைத்தீவு போன்ற இடங்களில் ஏ-9 பாதை மூடப்பட்டிருந்த வேளையில் தாக்குதல் நடத்தித்தானே புலிகள் வெற்றி பெற்றனர். இதை ஏன் அரசு இன்னும் உணரவில்லை?

நாம் கூறுவது எதனையும் அரசு காதில் வாங்கிக்கொள்ளாமல் செயற்படுகிறது. பேச்சு மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இறுதிச் சந்தர்ப்பமும் இதுவாகும். இதை அரசு உணராவிட்டாலும் நாடு பிரிவதை - தமிழீழம் பிறப்பதைத் தவிர்க்க முடியாது. புலிகளின் கொடி வெகு விரைவில் ஐ.நாவில் பறக்கும். - என்றார் சிவாஜிலிங்கம். (ஐ)

**கணக்கீடு S. தவா**
2007 - கம்பனி
செவ். புத. வியா. - 6.30 a.m.
2008 - கணக்கீட்டைக் கற்ற
சனி. ஞாயி - 4 p.m.
Day Class - கம்பனி. கிரய கணக்கீடு
திங். - வெள்ளி 8.30 a.m.
யூனிவேர்சல்
(யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே)

**BRIGHTMAN**
A/L 2008 LOGIC
By: ஜெயந்தன்
இன்று ஆரம்பம் 18.11.2006 SAT 10.00

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பனிமனையில் 18.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org